இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *8497/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 13042/2014-லிருந்து எழுகிறது)

இந்திய அரசு மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

கந்திபா பெஉறிரா ... எதிர்மேல்முறையீட்டாளர்

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண் *8979/2014*

உரிமையியல் மேல்முறையீடு எண் *8498/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 979/2015-லிருந்து எழுகிறது)

உரிமையியல் மேல்முறையீடு எண் *9886/2014*

உரிமையியல் மேல்முறையீடு எண் *8674/2015*

உரிமையியல் மேல்முறையீடு எண் *...../2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) ஆ.ப.வ. எண்கள் 20557-20558/2015-லிருந்து எழுகிறது)

உரிமையியல் மேல்முறையீடு எண் *2825/2016*

உரிமையியல் மேல்முறையீடு எண் *5008/2016*

உரிமையியல் மேல்முறையீடு எண் *8499/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 16767/2016-லிருந்து எழுகிறது)

உரிமையியல் மேல்முறையீடு எண் *8379/2016*

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் *1580-1581/2017*

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் *109-110/2017*

உரிமையியல் மேல்முறையீடு எண் *10355/2016*

உரிமையியல் மேல்முறையீடு எண் *10801/2016*

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் *9518-9520/2017*

சிறப்பு அனுமதி மனு (உ) (டி) எண் *13464/2018*

சிறப்பு அனுமதி மனு (உ) எண் *16615/2018*

சிறப்பு அனுமதி மனு (உ) எண் *3392/2019*

உரிமையியல் மேல்முறையீடு எண் *8500/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 32881/2018-லிருந்து எழுகிறது)

உரிமையியல் மேல்முறையீடு எண் *8501/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6544/2019-லிருந்து எழுகிறது)

சிறப்பு அனுமதி மனு (உ) (டி) எண் *18007/2019*

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருதா போஸ்:

சி.அ.ம. (உ) குறிப்பு எண் *13464/2018*, சி.அ.ம. (உ) எண் *16615/2018*, சி.அ.ம. (உ) எண் *3392/2019* மற்றும் சி.அ.ம. (உ) குறிப்பு எண் *18007/2019*-இல் சார்வு செய்தல் நிறைவேற்றப்படவில்லை என்பது பதிவாவணங்களிலிருந்து வெளிப்படுகிறது. எனவே, இவ்வழக்குகள் இந்த தொகுப்பு மேல்முறையீட்டு வழக்குகளிலிருந்து பிரித்தெடுக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளன. சார்வு செய்யப்பட்ட பின்னர், இவ்வழக்குகள் உரிய நீதியராயத்தின் முன்பு வைக்கப்படும்.

2. சி.அ.ம. (உ) ஆ.ப.வ. எண்கள் *20557-20558/2015* மற்றும் சி.அ.ம. (உ) எண் *32881/2018*-இல் தாமதம் மன்னிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

சிறப்பு அனுமதி மேல்முறையீட்டுக்காக எஞ்சியுள்ள மனுக்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

3. இவ்வனைத்து மேல்முறையீடுகளுமே, மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் வெவ்வேறு அமர்வுகளின் தீர்முடிவுகளிலிருந்து இந்நீதிமன்றத்தை வந்தடைந்துள்ளன மற்றும் உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புரைகள் பொதுவான சட்ட வினாவின்பேரிலானவையாகும். இம்மேல்முறையீடுகளிலுள்ள பிரச்சினையானது, கிராம அஞ்சல் பணியாளர்கள் (கி.அ.ப.) என்ற பணித்தகுதியில் அஞ்சல் துறையில் பணியாளர்களாக பணியாற்றிவருபவர்களின் பணிக்காலத்தை, அதேதுறையில் அவர்கள் முறையான பணியிடத்தில் தெரிவு செய்யப்பட்ட பின்னர், ஓய்வூதியத்திற்காக அவர்களது தகுதிபெறு பணிக்காலத்தை கணக்கிடும்பொருட்டு அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமா? இல்லையா? என்பதாகும். எங்கள் முன்பு மேல்முறையீட்டின்பாலான அந்தந்த உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புரைகள், அஞ்சல் துறையில் முறையான பணியாளர்களாக பின்னிட்டு தெரிவு செய்யப்பட்ட கிராம அஞ்சல் பணியாளர்களுக்கு ஆதரவாக ஒரேசீராக தீர்மானிக்கப்பட்டுள்ளன. அசல் விண்ணப்பதாரர்களின் பணிக்காலமானது, தகுதிப்பெறு பணிக்காலத்தைவிட குறைவாகவுள்ளதால் அவர்கள் ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவர்களாகமாட்டார்கள். 1972, மத்திய அரசு பணிகள் (ஓய்வூதிய) விதிகளில், மேற்படி துறையின் முறையான பணியில் ஓய்வூதியத்திற்குரிய குறைந்தபட்ச பணிக்காலம் அடங்கியுள்ளது. அது 10 வருடங்களாகும். நாம் இவ்விதிகளை இனி 1972-ஆம் ஆண்டு விதிகள் எனக் குறிப்பிடலாம். இவ்வனைத்து மேல்முறையீடுகளிலும், முறையான பணியிடத்திலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களின் பணிக்காலமானது, மேற்சொன்ன 10 வருட காலத்திற்கு சற்று குறைவாக உள்ளது. 1972-இன் விதிகளின் கூறு 49(1)-இல் வரையறுக்கப்பட்டுள்ளதாவது:-

"ஓர் அரசுப் பணியாளர் தகுதிபெறு பணிக்காலமான பத்து ஆண்டுகளை நிறைவுசெய்வதற்கு முன்பு, இவ்விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு ஓய்வுப்பெறுவாரெனில், தகுதிபெறு பணிக்காலத்தில் நிறைவுசெய்யப்பட்ட ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கான அரை மாத ஊதியத்தின் வீதத்தில் பணிக்கொடைத் தொகை கணக்கிடப்படவேண்டும்."

4. அஞ்சல் துறையில் துறைசாரா முகவர்களாகவும் குறிப்பிடப்படும் கிராம அஞ்சல் பணியாளர்களின் பணிகுறித்து தனி வழிகாட்டு விதிகள் உள்ளன. எங்கள் முன்பு குறிப்பிடப்பட்டுள்ள தற்போதைய விதிகள், **கிராம அஞ்சல் பணியாளர்கள் (நடத்தை மற்றும் பணியமர்த்துதல்) விதிகள்,** *2011* *(2011* விதிகள்*)* எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக இதே விதிகளை உள்ளடக்கிய **அஞ்சல் மற்றும் தந்தி துறைசாரா முகவர்கள் (நடத்தை மற்றும் பணியமர்த்துதல்) விதிகள்,** *1964* நடைமுறையிலிருந்தது. இது கிராம அஞ்சல் பணியாளர்கள் **(நடத்தை மற்றும் பணியமர்த்துதல்) விதிகள்,** *2001*-ஆல் மாற்றீடு செய்யப்பட்டது. இவ்விதிகள் இறுதியாக, விதிகள் *2011*-க்கு வழிவகுத்தது. கிராம அஞ்சல் பணியாளர்கள், *(*கி.அ.ப.*)* ஈடுபட்டுவந்த பணியின் தன்மையைப் பொறுத்து, காலப்போக்கில் வெவ்வேறு சுருக்கீடு செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் மூலம் அடையாளம் காணப்பட்டனர். அவை துறைசாரா அஞ்சல் வழங்குநர் *(*து.அ.வ.*)*, துறைசாரா அஞ்சல் கட்டுபவர் *(*து.அ.க.*)*, அஞ்சல் கொண்டுசெல்பவர், துறைசாரா அஞ்சலக முகவர் மற்றும் கி.அ.ப. ஆகும். இவற்றில் கடைசியிலுள்ள பதவியானது, தற்போது கிராம அஞ்சல் பணியாளர்கள் என்றழைக்கப்படுவர்களின் பதவிச் சுருக்கமாகும்.

5. எங்கள் முன்பு வாதிடப்பட்டுள்ள முன்னணி வழக்கானது, மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் கட்டாக் அமர்வு முன்பு மு.வ. எண். 609/2010-ஆக பதிவு செய்யப்பட்டு, கந்திபா பெஉறிராவால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்திலிருந்து எழுகிறது. மேற்படி விண்ணப்பதாரர், 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று ஓரிசா மாநிலத்தின் பாலசூர் பகுதியில் கி.அ.ப.-ஆக முறைப்படி தெரிவு செய்யப்பட்டார். அவர் 1999-ஆம் ஆண்டு மே 25 வரை அப்பணித் தகுதியில் தொடர்ந்து பணிபுரிந்துவந்தார், அந்த நாள் முதற்கொண்டு அவர் முறையான தெரிவுமுறை மூலம் முறையான பணியில் 'டி' பிரிவு பணியில் அமர்த்தப்பட்டார். "டி" பிரிவு பணியாளர் என்ற இத்தகுதிநிலையானது, 1999-ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று அதிகாரிகளால் வழங்கப்பட்ட குறிப்பாணை மூலம் அவருக்கு முன்தேதியிட்டு வழங்கப்பட்டது. அவர் 2008-ஆம் ஆண்டு ஜூன் 30 அன்று ஓய்வுபெறும் வயதை அடைந்தார். ஆயினும் அவர் 'டி' பிரிவு பணியிடத்தில் குறைந்தபட்ச பணிக்காலமான 10 வருடங்களை நிறைவுசெய்யவில்லை என்ற காரணத்தின்பேரில், அவரது ஓய்வூதிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தீர்ப்பாயமானது, 2011-ஆம் ஆண்டு ஜூலை 6 அன்று பிறப்பித்த ஆணை மூலம் மு.வ. எண் 310/2010-இல் **(ஸ்ரீ கௌரங்கா சிஉெறச். சாஉறூ -எதிர்- இந்திய அரசு மற்றும் பலர்)** தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்ட முந்தைய தீர்முடிவுகளைச் சார்வுற்று, தகுதிபெறு பணிக்காலத்தின் தேவையை நிறைவேற்றுவதற்காக கிராம அஞ்சல் பணியாளர் என்ற தகுதிநிலையில் பணிபுரிந்துவந்த காலத்தைக் கணக்கிடும்படியான அவரது வேண்டுரையை உறுதிசெய்தது. தீர்ப்பாயம் கந்திபா பெஉறிரா என்ற வழக்கைத் தீர்மானித்து, உத்தரவிட்டதாவது:-

"இதற்கிடையில் இத்தீர்ப்பாயத்தின் மேற்படி உத்தரவானது, ஏதேனும் மேலமை நீதிமன்றத்தால் மறு ஆய்வு செய்யப்பட்டது என்பதோ அல்லது மாற்றியமைக்கபட்டது என்பதோ எதிர்மேல்முறையீட்டாளர்களின் வழக்கல்ல மேற்கூறியவற்றைக் கருத்திற்கொண்டு, கௌரங்கா சிஉெறச். சாஉறஅ (மேற்படி) என்ற வழக்கில் இத்தீர்ப்பாயத்தால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட கருத்திலிருந்து மாறுபடுவதற்கான நியாயமான காரணங்கள் எதனையும் நான் காணவில்லை. எனவே, விண்ணப்பதாரரின், தகுதிபெறு பணிக்காலத்தின் குறைந்தபட்ச பணிக்காலமான 10 வருட காலத்தைக் கணக்கிடும் பொருட்டு, அவருடைய குறைவுபடும் பணிக்காலத்தை துறைசாரா பணியிலிருந்து கொண்டுவந்து, அதன்படி விண்ணப்பதாரருக்கு ஓய்வூதியத்தையும், மற்றும் ஓய்வூதிய பலன்களையும் அவரது ஓய்வு பெற்ற நாள் முதற்கொண்டு, உடனடியாக முன்னுரிமையளித்து, இவ்வுத்தரவின் நகல் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள்ளாக ஒப்பளிப்பதற்கு எதிர்மேல்முறையீட்டாளர்கள் இதன்மூலம் பணிக்கப்படுகின்றனர். தவறும்பட்சத்தில், விண்ணப்பதாரர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து உள்ளபடியாக தொகை செலுத்தப்படும் நாள் வரையில் நிலுவை ஓய்வூதியத்திலும், கொடுக்கப்படவேண்டிய ஓய்வூதியத்திலும் 6%-ஐ பெறுவதற்குரியவராவார்; மேலும், எதிர்மேல்முறையீட்டாளர்கள், தொகையைச் செலுத்துவதில் தாமதம் ஏற்படுத்தியதற்கு காரணமாக

விளங்கும் அலுவலரிடமிருந்து வட்டித்தொகையை வசூலிப்பதற்கும் உரிமையளிக்கப்படுகின்றனர்."

6. ஒரிசா உயர் நீதிமன்றம், இந்திய அரசால் மற்றும் அஞ்சல்துறை அதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில், 2014-ஆம் ஆண்டு ஜனவரி 3-ஆம் நாளன்றான தீர்ப்புரை மூலம், தீர்ப்பாயத்தின் உத்தரவில் தலையிடுவதற்கு யாதொரு காரணமும் காணவில்லை. உயர் நீதிமன்றம், முக்கியமாக நீ.பே.ம. (உ) எண் 11665/2011-இல் 2011-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் நாளன்று நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புரையின்மேல் சார்வுற்று, தீர்ப்பாயத்தின் மேற்படி உத்தரவிற்கிணங்கும்படி உத்தரவிட்டது.

7. எஞ்சியுள்ள மேல்முறையீடுகளிலுள்ள, பொருண்மைசார்ந்த பிரச்சினைகளும் ஒரே தன்மையுடையவையாகும். உள்ளடங்கியுள்ள சட்டக்கூறுகளும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவையே. இக்காரணங்களுக்காகவே, இவ்வழக்குகளை தனித்தனியே கையாளுவதை அவசியமென நாங்கள் கருதவில்லை. எனினும், நாங்கள் ஒவ்வொரு மேல்முறையீடுகளின் முக்கியமான பொருண்மைசார் அம்சங்களையும் அட்டவணை வடிவில் பின்வருமாறு கொடுத்துள்ளோம்:-

வரிசை எண்	**வழக்கு எண்**	**அசல் விண்ணப்பதாரர்களின் பணி விவரங்கள்**
1.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** 8979/2014	8.8.1970 - கிராம அஞ்சல் பணியாளராக (GDS) பணியில் சேர்ந்தார். (28 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 31.12.1998 - 'டி' பிரிவு பணியிடத்தில் நியமிக்கப்பட்டார். 30.6.2008 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 6 **மாதங்கள்,** 1 **நாள்.**

2.	**சி.அ.ம. (உ) எண்** 979/2015	11.8.1967 - கிராம அஞ்சல் பணியாளராக பணியில் சேர்ந்தார். (29 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 18.10.1996 - 'டி' பிரிவு பணியிடத்தில் நியமிக்கப்பட்டார். 31.7.2006 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 8 **மாதங்கள்,** 27 **நாட்கள்.**
3.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** 9886/2014	14.8.1972 - கிராம அஞ்சல் பணியாளராக பணியில் சேர்ந்தார். (27 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 6.9.1999 - அஞ்சலராக பதவி உயர்வு பெற்றார். ('ஈ' பிரிவு பணி) 28.2.2009 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 5 **மாதங்கள்,** 11 **நாட்கள்.**
4.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** 8674/2015	14.9.1971 - கிராம அஞ்சல் பணியாளராக பணியில் சேர்ந்தார். (28 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 4.9.1999 - 'டி' பிரிவு பணியிடத்தில் நியமிக்கப்பட்டார். 30.11.2006 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 7 **ஆண்டுகள்,** 12 **மாதங்கள்,** 13 **நாட்கள்.**
5.	**சி.அ.ம. (உ)** ...../2015-**இல் ஆ.ப.வ. எண்** 20557-20558/ 2015	29.8.1981 - துறைசாரா அஞ்சல் முகவராக (EDDA) பணியில் சேர்ந்தார். (16 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 24.12.1997 - 'டி' பிரிவு பணியிடத்தில் நியமிக்கப்பட்டார். 31.5.2007 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 5 **மாதங்கள்,** 23 **நாட்கள்.**
6.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** 2825/2016	25.2.1972 - கிராம அஞ்சல் பணியாளராக பணியில் சேர்ந்தார். (31 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 8.3.2003 - அஞ்சலராக தேர்வு செய்யப்பட்டார். 31.10.2012 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 7 **மாதங்கள்,** 23 **நாட்கள்.**

7.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** 5008/2016	21.2.1979 - கிராம அஞ்சல் பணியாளராக பணியில் சேர்ந்தார். (29 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 13.6.2001 - அஞ்சலராக பணியில் சேர்ந்தார். 31.10.2010 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 4 **மாதங்கள்,** 18 **நாட்கள்.**
8.	**சி.அ.ம. (உ) எண்** 16767/2016	1.2.1963 - கிராம அஞ்சல் பணியாளராக பணியில் சேர்ந்தார். (29 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 30.6.1992 - அஞ்சல் சேவகராக பணியில் சேர்ந்தார். 31.1.2002 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 7 **மாதங்கள்.**
9.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** 8379/2016	9.6.1967 - துறைசாரா அஞ்சல் தூதராக (EDMC) பணியில் சேர்ந்தார். (34 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 12.9.1997 - அஞ்சலராக பதவி ஏற்றார். 31.3.2007 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 9 **ஆண்டுகள்,** 6 **மாதங்கள்,** 20 **நாட்கள்.**
10.	**உரிமையியல் மேல்முறையீடு எண்கள்** 1580-1581/2017	10.1.1963 - துறைசாரா அஞ்சல் கொண்டு செல்பவராக பணியில் சேர்ந்தார். (29 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 27.2.1992 - 'டி' பிரிவு பணியிடத்தில் சேர்ந்தார். 31.12.2000 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 8 **ஆண்டுகள்,** 10 **மாதங்கள்,** 3 **நாட்கள்.**
11.	**உரிமையியல் மேல்முறையீடு எண்கள்** 109-110/2017	22.6.1962 - துறைசாரா முகவராக பணியில் சேர்ந்தார். (31 ஆண்டுகள் பணிபுரிந்தார்) 15.11.1993 - 'டி' பிரிவு பணியிடத்தில் சேர்ந்தார். 31.3.1997 - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: 5 **ஆண்டுகள்,** 4 **மாதங்கள்,** 15 **நாட்கள்.**

12.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** *10355/2016*	*25* ஆண்டுகள் துறைசாரா அஞ்சல் முகவராக பணிபுரிந்தார். *9.11.2001* - அஞ்சலராக தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டார். *30.6.2011* - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: *9* **ஆண்டுகள்,** *7* **மாதங்கள்,** *21* **நாட்கள்.**
13.	**உரிமையியல் மேல்முறையீடு எண்** *10801/2016*	**ஜூலை** *1972* - துறைசாரா அஞ்சல் கொண்டுசெல்பவராக பணியில் சேர்ந்தார். *(27* ஆண்டுகள் பணிபுரிந்தார்*)* *15.9.1999* - 'டி' பிரிவு பணியிடத்தில் சேர்ந்தார். *31.5.2009* - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: *9* **ஆண்டுகள்,** *8* **மாதங்கள்,** *16* **நாட்கள்.**
14.	**14(i) உரிமையியல் மேல்முறையீடு எண்கள்** *9518-20/2017*	*14.7.1972* - கிராம அஞ்சல் பணியாளராக பணியில் சேர்ந்தார். *(30* ஆண்டுகள் பணிபுரிந்தார்*)* *25.11.2002* - 'டி' பிரிவு பணியிடத்தில் சேர்ந்தார். *30.6.2012* - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: *9* **ஆண்டுகள்,** *7* **மாதங்கள்,** *6* **நாட்கள்.**
	14(ii)	*5.11.1973* - துறைசாரா அஞ்சல் கொண்டு செல்லும் முகவராக பணியில் சேர்ந்தார். *(23* ஆண்டுகள் பணிபுரிந்தார்*)* *17.4.1997* - அஞ்சலராக பணியில் சேர்ந்தார். *31.12.2006* - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: *9* **ஆண்டுகள்,** *8* **மாதங்கள்,** *15* **நாட்கள்.**
	14(iii)	*1.11.1971* - துறைசாரா அஞ்சலக தூதர்-I-ஆக இருந்தார். *(28* ஆண்டுகள் பணிபுரிந்தார்*)* *3.11.1999* - 'டி' பிரிவு பணியிடத்தில் சேர்ந்தார். *31.7.2009* - பணி ஓய்வு பெற்றார். தகுதிபெறு பணிக்காலம்: *9* **ஆண்டுகள்,** *8* **மாதங்கள்,** *29* **நாட்கள்.**

15.	***சி.அ.ம. (உ) எண் 32881/2018***	*25.1.1971 - துறைசாரா அஞ்சல் சேவகராக பணியில் சேர்ந்தார். (28 ஆண்டுகள் பணிபுரிந்தார்)* *27.11.1999 - 'டி' பிரிவு பணியிடத்தில் சேர்ந்தார்.* *31.8.2009 - பணி ஓய்வு பெற்றார்.* *தகுதிபெறு பணிக்காலம்: 9* ***ஆண்டுகள், 8 மாதங்கள், 19 நாட்கள்.***
16.	***சி.அ.ம. (உ) எண் 6544/2019***	*21.7.1972 - துறைசாரா அஞ்சல் முகவராக பணியில் சேர்ந்தார். (31 ஆண்டுகள் பணிபுரிந்தார்)* *6.8.2003 - 'டி' பிரிவு பணியிடத்தில் சேர்ந்தார்.* *30.6.2011 - பணி ஓய்வு பெற்றார்.* *தகுதிபெறு பணிக்காலம்: 7* ***ஆண்டுகள், 10 மாதங்கள், 9 நாட்கள்.***

8. கிராம அஞ்சல் பணியாளர்களாக பொறுப்பேற்கப்பட்ட பணி, முறையான பணிக்கு சமமாகக் கருதப்படமுடியாது என்ற காரணத்தின் அடிப்படையில், முதன்மையாக தீர்ப்பாய உத்தரவை உறுதிசெய்து, **கந்திபா பெஉறிரா** *(மேற்படி)* வழக்கில் ஒரிசா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் எதிர்த்துள்ளார். கிராம அஞ்சல் பணியாளர்களின் பணியானது குறைந்த பணி நேரத்தை *(3* முதல் *5* மணி நேரத்திற்குட்பட்டது*)* கொண்டது. கிராம அஞ்சல் பணியில் *(கி.அ.ப.)* ஈடுபட்டுள்ள பணியாளர் ஒரே நேரத்தில் வேறொரு தொழிலையும் செய்வதற்குரியவராவார். கிராம அஞ்சல் பணியாளர்களின் பணிகள் வெவ்வேறு தொகுப்பு விதிகளால் முறைப்படுத்தப்பட்டுள்ளன, மேலும், நீதிமன்றம், குறிப்பிட்டதொரு தொகுப்பு பணியாளர்களுக்கான ஒட்டுமொத்தமான புதிய பணி விதிகளை உருவாக்குவதற்கு பணியமர்த்துநர் என்ற தகுதியிலுள்ள நிர்வாகத்தையோ அல்லது செயல் அதிகாரிகளையோ, நீதிமன்றம்

பணித்திருக்கக்கூடாது என்று மேல்முறையீட்டாளர்களின் சார்பாக வலியுறுத்திக் கூறப்பட்டது.

9. **அஞ்சல் அலுவலகத்தின் கண்காணிப்பாளர் மற்றும் பலர் -எதிர்- பீ.கே. இராஜம்மா** [*(1977) 3* **எஸ்.சி.சி.** *94*] என்ற வழக்கில், அஞ்சல் துறைகளுடன் தொடர்புடைய துறைசாரா முகவர்கள், அரசுப் பணிகளை வகித்துவந்தனர் என்று வகுத்துரைக்கப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு *311*-இன் பொருந்துகையை துறைசாரா முகவர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பணிநீக்கல் உத்தரவுகள் தொடர்பாக விவாதிக்கையில் அக்காண்முடிவு கொடுக்கப்பட்டது. **சேத்ராம் -எதிர்- ஜித் சிங்** [*(2008) 14* **எஸ்.சி.சி.** *427*] என்ற வழக்கில் இந்நீதிமன்றமானது, கிராம அஞ்சல் பணியாளர் என்பவர் அரசுப் பணியாளரா? இல்லையா? என்ற வினாவைக் குறித்து ஆராய்ந்தது. இப்பிரச்சினை, பஞ்சாப் மாநில தேர்தல் ஆணையச் சட்டம், *1994*-இன்படி நகர பஞ்சாயத்து உறுப்பினராவதற்கு கிராம அஞ்சல் பணியாளர்களின் தகுதிப்பாடு தொடர்புடைய ஒரு பிரச்சினையில் இந்நீதிமன்றத்தின் முன்பு பரிசீலனைக்காக வந்தது. அத்தகைய முகவர்கள் அரசுப் பணிகளை வகிக்கும் அரசுப் பணியாளர்களாவர் என்பதே நீதிமன்றத்தின் கருத்துரையாகும். இரண்டு விதமான ஓய்வூதியதாரர்களுக்கிடையே வேறுபாடு ஏதுமிருக்கமுடியாது என்ற எதிர்மேல்முறையீட்டாளர்களின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக அவர்களது சார்பில் **டி.எஸ். நகாரா மற்றும் பலர் -எதிர்- இந்திய யூனியன்** [*(1983) 1* **எஸ்.சி.சி.** *305*] என்ற வழக்கில் அரசமைப்பு அமர்வின் தீர்ப்புரையும் மேற்கோள் காட்டப்பட்டது.

*10. 'டி' பிரிவு பணியாளர்களாக பணியில் ஈர்க்கப்பட்டுள்ள ஒரு பிரிவைச் சார்ந்த கிராம அஞ்சல் பணியாளர்கள் இம்மேல்முறையீடுகளில் விடயப்பொருளாக உள்ளவர்களுக்குத் தொடர்புடைய பயன்களைக் கோரி, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 32-இன் கீழ் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை வேண்டுரைத்து இந்நீதிமன்றத்தை அணுகினர். அம்மனுவானது, நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 17/2009-ஆக பதிவு செய்யப்பட்டது. அந்நீதிப்பேராணை மனுவில் அடங்கியுள்ள விதியானது, **2010-ஆம் ஆண்டு அஞ்சல் துறை (பல்பணி மேற்கொள்ளும் பணியாளர்) பணியாளர் ஆட்சேர்ப்பு விதிகளாகும்.** கிராம அஞ்சல் பணியாளர்களை அரசுப் பணி வகிப்பவர்களாக அறிவிப்பதற்கு மேற்படி விதிகளில் குறிப்பிட்ட வகைமுறையுள்ளது, ஆனால் அவர்கள் முறையான அரசுப் பணிக்கு அப்பாற்பட்டவர்களாவர். மேற்படி நீதிப்பேராணை மனு, புது தில்லி, மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வை அணுகுவதற்கு நீதிப்பேராணை மனுதாரர்களுக்கு உரிமையளித்து, 2014-ஆம் ஆண்டு டிசம்பர் 9 அன்று பிறப்பித்த உத்தரவு மூலம் நீதிப்பேராணை மனு தீர்வுசெய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து, தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு முன்பு மூன்று விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவை மு.வ. எண்கள் 749/2015, 3540/2015 மற்றும் மு.வ. எண். 613/2015-ஆக பதிவு செய்யப்பட்டன. தனிப்பட்ட கிராம அஞ்சல் பணியாளர்களின் விண்ணப்பங்கள் தீர்ப்பாயத்தால் அனுமதிக்கப்பட்டன. அது தொடர்பான தீர்முடிவானது, **(வினோத் குமார் சக்சேனா மற்றும் பலர் -எதிர்- இந்திய அரசு மற்றும் பலர்)** 2016-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாளன்று வழங்கப்பட்டதில், தீர்ப்பாயம் உத்தரவிட்டதாவது:-*

"(அ) முறையான 'டி' பிரிவு பணியாளர்களாக ஈர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து கிராம அஞ்சல் பணியாளர்களுக்கும், ஓய்வூதியப் பலன்களை வழங்கும்பொருட்டு கிராம அஞ்சல் பணியாளர்களாக பணிபுரிந்த காலமானது, முழுவதுமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) முறையான 'டி' பிரிவு பணியாளர்களாக ஈர்க்கப்படாத கிராம அஞ்சல் பணியாளராக பணி ஓய்வு பெற்ற அனைவருக்கும் 1972-ஆம் ஆண்டு மத்திய அரசு ஊழியர் (ஓய்வூதியம்) விதிகளின் வகைமுறைகளின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படும், ஆனால், ஓய்வூதியம் பெறுவதற்காக, கிராம அஞ்சல் பணியாளராக பணிபுரிந்த காலத்தில் 5/8 மட்டுமே பணிக்காலமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அதன்படி விதி 6-ஆனது திருத்தியமைக்கப்படும்.

(இ) மேற்கூறியபடியே, விதி 6-ஐ தவிர, கிராம அஞ்சல் பணியாளர் (நடத்தை மற்றும் பணியமர்த்துதல்) விதிகள், 2011 செல்லத்தக்கவையாக தீர்மானிக்கப்பட்டுள்ளன.

(ஈ) முறையான பணியாளர்களுக்கு கிடைக்கக்கூடிய முறையான பணியாளர்களுக்கு இணையான சம்பளம் மற்றும் படிகள் மற்றும் இதர பயன்கள் தொடர்பாக கிராம அஞ்சல் பணியாளர்களின் கோரிக்கையானது நிராகரிக்கப்படுகிறது."

11. எங்களில் ஒருவரால் (மாண்புமிகு நீதியரசர் திரு. ரஞ்சன் கோகாய்) தலைமை வகிக்கப்படும் இந்நீதிமன்ற அமர்வு, 2015-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்

24-ஆம் நாளன்று தீர்வுசெய்யப்பட்ட உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 13675-13676/2015 **(இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்)** என்ற வழக்கில் இதேபோன்றதொரு வினாவை ஆராய்ந்தது. அம்மேல்முறையீட்டிலுள்ள பிரச்சினையின் நோக்கமானது, பின்வரும் தீர்ப்புரையின் பத்தியிலிருந்து தெரியவருகிறது:-

> "2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான என்.எஸ். பொன்னுசாமி 1968-ஆம் ஆண்டு முதல் 1993 வரை அஞ்சல் துறையில் துறைசாரா முகவராக பணிபுரிந்துவந்தார். அவரது பணியானது, 1.4.1993 அன்று முறைப்படுத்தப்பட்டு, அவர் 31.5.2002 அன்று ஓய்வுபெற்றார். இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் ஒன்பது ஆண்டுகள் இரண்டு மாதங்கள் பணிகாலத்தை நிறைவு செய்திருந்தார், ஆனால் அவருக்கு ஓய்வூதியம் ஏதும் வழங்கப்படவில்லை. ஆகவே, அவர் கற்றறிந்த தீர்ப்பாயத்தை அணுகினார், அது துறைசாரா முகவர்களாக பணியாற்றிய அத்தகைய பணியாளர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு தேவைப்படுகின்ற தகுதிப்பெறு பணிக்காலமான அதாவது 10 ஆண்டுகளை ஈட்டுவதற்கு அவர்களை இயல்விக்கும்வகையில் அவர்களுக்கு சில பணிக்கால பலனைத் தருவதற்கு ஒரு செயல்வரைச் சட்டத்தை வகுக்கும்படி உத்தரவிட்டது. குறையுற்றதன்பேரில், இந்திய அரசு, நீதிப்பேராணை மனு மூலம் உயர் நீதிமன்றத்தை அணுகியதிலிருந்து இம்மேல்முறையீடுகள் எழுந்துள்ளன."

12. 1991-ஆம் ஆண்டில் அஞ்சல் மற்றும் தந்தித் துறையால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் மற்றவற்றுக்கிடையில் அவ்வுத்தரவானது தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்டது. ஓய்வூதியத்திற்கு தகுதிபெறும்பொருட்டு, துறைசாரா முகவரால் புரியப்பட்ட அப்பணிக்காலத்தை, 50% அளவுக்கு முறையான பணிக்காலத்துடன் சேர்க்கப்படவேண்டும் என மேற்படி சுற்றறிக்கையானது வகைசெய்கிறது. எனினும், மேல்முறையீடு நிலுவையிலுள்ளபோது, அம்மேல்முறையீட்டில் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு முறையான ஓய்வூதியம் வழங்கி மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது.

13. இந்திய அரசின் மேல்முறையீட்டை அனுமதித்து, அவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டதாவது:-

> "1991-ஆம் ஆண்டு அஞ்சல் மற்றும் தந்தித் துறையின் சுற்றறிக்கை மூலம் உள்ளடக்கப்படும் துறைசாரா முகவர்கள், முழுநேர தினக்கூலி பணியாளர்கள் என்றும், அதேசமயம் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் பகுதிநேர தினக்கூலி பணியாளர் என்றும், மேலும் 1964-ஆம் ஆண்டு வகுக்கப்பட்டு, 2001 மற்றும் 2011-ஆம் ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பட்ட விதிகளின் கீழ், அவரது பணி கட்டுப்படுத்தப்பட்டு, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரைப் போன்ற பணியாளர்கள் நாள்தோறும் மூன்றிலிருந்து ஐந்து மணிநேரம் பணியாற்றுவதற்குரியவர்கள் என்றும் மற்றவற்றுக்கிடையே கூறி, மேல்முறையீட்டாளர்-இந்திய அரசு கூடுதல் ஆணையுறுதியாவணம் ஒன்றை 26.10.2015 அன்று தாக்கல் செய்துள்ளது. அவர்களின் பணி

நியமன சமயத்தில், அவர்களது குடும்பங்களைப் பேணுவதற்கு மாற்று வருவாய்க்கான ஆதாரமுள்ளது என்று அவர்கள் உறுதிமொழி அளிக்கவேண்டும். இந்திய அரசின் கூற்றுப்படி, முறையான அஞ்சல் அலுவலகம் ஒன்றை அமைத்து, நிர்வகிப்பது நிறைவேற்றப்படக்கூடிய செயல்திட்டமாக இல்லாதவிடத்து, நாட்டிலுள்ள தொலைதூர கிராமங்களின் முகவரிகளுக்கு சென்றடைவதற்காக அத்தகையப் பணியாளர்களை நியமிப்பது அவசியமாகிறது என்பதாகும். அத்தகைய பணியாளர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அல்லர், ஆனால், கருணைக்கொடை பெறுவதற்கு தகுதியுடையவர்கள். மேலும், அவ்வாறான பணச்செலுத்தங்கள் அவ்வப்போது அரசால் தீர்மானிக்கப்படும் என்பதான மேற்படி விதிகளின் வகைமுறைகளுக்கும் கவனம் ஈர்க்கப்பட்டது.

உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டவாறான, கற்றறிந்த தீர்ப்பாயத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவுக்கு அடிப்படையாக அமைந்த 1991-ஆம் ஆண்டு அஞ்சல் மற்றும் தந்தித்துறையின் சுற்றறிக்கையானது, முழுநேர தினக்கூலி பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியது என்றும், இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் அப்பிரிவைச் சார்ந்தவரல்லர் என்ற பொருண்மையைக் கருத்திற்கொண்டும், மேற்கண்டவாறு எதிர்மேல்முறையீட்டாளரின் பணிக்கால நிபந்தனைகளைக் கட்டுப்படுத்துகின்ற விதிகளின் வகையங்களைக் கருத்திற்கொண்டும், கற்றறிந்த தீர்ப்பாயத்தால் எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடாது

என்பதும், அது உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடாது என்பதும் எங்களது கருத்தாகும். இவ்விடயம் கொள்கை முடிவுகள் தொடர்புடையதும், நிதிச் சிக்கலை உள்ளடக்குவதுமாகும். அதைத்தவிர மேற்குறிப்பிட்ட, எங்கள் முன் வைக்கப்பட்ட பொருண்மைகளைக் கருத்திற்கொண்டு, எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகளில் தலையீடு செய்து, இந்திய அரசால் தாக்கல் செய்யப்பட்ட இம்மேல்முறையீடுகளை அனுமதிப்பது உகந்ததென நாங்கள் கருதுகிறோம். ஆயினும், இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதியமானது, இந்த உத்தரவால் பாதிக்கப்படாது என்பதையும், மேற்படி எதிர்மேல்முறையீட்டாளர், சட்டத்தின் வகையங்களுக்கேற்ப ஓய்வூதியத்தின் பலனைத் தொடர்ந்து அனுபவிப்பார் என்பதையும் நாங்கள் தெளிவாக்குகிறோம்."

14. மேலும், எதிர்மேல்முறையீட்டாளர்கள், 2011-ஆம் ஆண்டு விதிகளின் கூறு 6-ஐ குறிப்பீடு செய்துள்ளனர், அது, வரையறுப்பதாவது:-

"பணியாளர்கள் எந்த ஓய்வூதியமும் பெற உரிமையுடையவர்கள் அல்லர். ஆயினும், அவர்கள் அவ்வப்போது அரசால் தீர்மானிக்கப்படும் கருணைக்கொடை அல்லது வேறேதேனும் தொகையைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களாவர்."

இக்குறிப்பிட்ட விதியானது, இவ்வகையான பணியாளர்களின் பணியை ஓய்வூதியமற்றதாக்குவதாயினும், புது தில்லி மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வால் 2016-ஆம் அண்டு நவம்பர் 17-ஆம் நாளன்று வழங்கப்பட்ட தீர்முடிவில், அது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்பதால் அகற்றப்பட்டுள்ளது. தீர்ப்பாயத்தின் மேற்படி தீர்முடிவானது, இந்திய அரசால் நீ.பே.ம. (உ) எண் 832/2018-ஆக பதிவு செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவின் வாயிலாக தில்லி உயர் நீதிமன்றத்தின் முன்பு எதிர்க்கப்பட்டது என்று மேல்முறையீட்டில் இந்திய அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களின் மூலம் நாங்கள் அறிந்துகொண்டோம். மேற்படி நீதிப்பேராணை மனுவில் தில்லி உயர் நீதிமன்றத்தால் இதுவரை எந்தவொரு செயல்விளைவான உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. உரிமையியல் மேல்முறையீடு எண் 109-110/2017 எழுவதற்கு வழிகோலிய தீர்ப்புரையில், 1964-ஆம் ஆண்டு விதிகளின் வகையம்போன்றே அதனுடைய கூறு 4-ம் பஞ்சாப் மற்றும் உறரியானா உயர் நீதிமன்றத்தால் சட்டப்படி செல்லாததாக்கப்பட்டது. (மேற்கண்ட) **இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்** என்கிற வழக்கில் கிராம அஞ்சல் பணியாளர்களின் பணியானது ஓய்வூதியத்திற்கு தகுதியுடையதல்ல என்ற பொருண்மை இந்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்ட காரணக்கூறுகளில் ஒன்றாக இருந்தாலும், கிராம அஞ்சல் பணியாளர்களின் வேண்டுரையானது, இந்நீதிமன்றத்தால் ஏன் நிராகரிக்கப்பட்டது என்பதற்கு அது முக்கியமான காரணமல்ல. மேல்முறையீட்டை அனுமதித்ததற்கான காரணவிளக்கம் அடங்கியுள்ள மேற்படி தீர்ப்புரையின் தொடர்புடைய பத்திகளை நாங்கள் மீண்டும் எடுத்தளித்திருக்கிறோம். இவ்வாறு, இத்தொகுப்பு மேல்முறையீடுகளை தீர்வுசெய்வதற்கான நடவடிக்கையில்,

கிராம அஞ்சல் பணியாளர்களின் பணியை ஓய்வூதியமற்ற பணியாக வகுத்துரைக்கும் விதி அகற்றப்பட்டுள்ளது என்பது நன்கு பொருந்தக்கூடியதல்ல. அஞ்சல் துறையில் முறையான பணியாளராக பணியாற்றுபவரை ஓய்வூதியம் பெறுவதற்குரியவராக்க அவரது தகுதிபெறு பணிக்காலத்தை தீர்மானிக்கும்பொருட்டு, அவர் கிராம அஞ்சல் பணியாளராக பணிபுரிந்த காலத்தைக் கணக்கிடலாமா? என்பதே இத்தீர்ப்புரையில் நாம் விவாதிப்பதற்குரிய கருத்துமாறுபாடான விடயமாகும்.

15. இரு வகையான ஓய்வூதியதாரர்களுக்கு இடையே எந்தவித செயற்கைத்தனமான வேறுபாடும் இருக்கக்கூடாது என்ற அவர்களது வாதுரைக்கு ஆதரவாக எதிர்மேல்முறையீட்டாளர்களின் தரப்பில் (மேற்கண்ட) **டி.எஸ். நகாரா** என்ற வழக்கின்மீது சார்வுறப்பட்டது. ஆனால் (மேற்கண்ட) **டி.எஸ். நகாரா** என்ற வழக்கின் பொருண்மைசார்ந்த சூழ்நிலை மாறுபட்டதாகும். இந்த வேறுபாடு, ஓய்வுபெற்ற தேதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட இரு பிரிவைச் சார்ந்த ஓய்வுபெற்ற ஆயுதப்படை பணியாளர்கள் தொடர்புடைய அவ்வழக்கில் எதிர்க்கப்பட்டது, ஒரு பிரிவினர் ஓய்வூதியத்தின் நல்லதொரு பலனைப்பெற்றனர். (மேற்கண்ட) **பி.கே. இராஜம்மா** மற்றும் (மேற்கண்ட) **சேத் ராம்** வழக்குகளின் தீர்முடிவுகள், கி.அ.ப.-ஆக அரசுப் பணிகளை வகித்துவந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள், அரசு பணியாளர்களே என்னும் அறுதியுரைக்கானவையாகும். அதற்குமாறாக வெவ்வேறு பணி விதியினை ஒன்றுசேர்த்து நெறிப்படுத்தும் பதவிகளில் கிராம அஞ்சல் பணியாளர்கள் ஆற்றிவரும் பணிகளை முறையான பணிநியமனத்தில் அவர்களின் பணிகளுடன் சேர்ப்பதற்கு இத்தீர்வறிக்கைகளின் அகவுரையைப் பொருத்தவியலாது. எதிர்மேல்முறையீட்டாளர்களின் சார்பாக சார்வுறப்பட்ட மற்றொரு தீர்வறிக்கையானது,

உறபீப் கான் -எதிர்- உத்தரகாண்ட் மாநில அரசு மற்றும் பலர் [*2018 (1)* **எஸ்.எல்.ஆர்** *724 (எஸ்.சி.)*] என்ற வழக்கில் *2017*-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் *23*-ஆம் நாளன்று வழங்கப்பட்ட இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையாகும். அவ்வழக்கானது, ஓய்வூதியம் வழங்கும் பிரச்சினையில், உத்தரகாண்ட் மாநிலத்தின் கட்டணப் பணி ஊழியரான ஒருவருக்கு அப்பணித் தகுதியில், அவரது பணிக்காலத்தை, முறையான பணியின் தகுதிபெறு பணிக்காலத்துடன் கணக்கிடக்கோரும் இதேபோன்றதொரு பிரச்சினையிலிருந்து எழுகிறது. இத்தீர்ப்புரையும், இரு நீதியரசர்கள் அமர்வால் வழங்கப்பட்டது, அதில் ஒருவராக மாண்புமிகு நீதியரசர் திரு. இரஞ்சன் கோகாய் அவர்கள் இந்திய தலைமை நீதியரசராக பதவி ஏற்பதற்கு முன்பு இருந்தார். மேற்படி தீர்முடிவு, **பஞ்சாப் ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்ட் மற்றும் ஒருவர் -எதிர்- நகாரா சிங் மற்றும் ஒருவர்,** [*(2010) 4* **எஸ்.சி.சி.** *317*] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முந்தைய தீர்ப்புரையைப் பின்பற்றியுள்ளது. பிந்தைய வழக்கு, பஞ்சாப் மாநிலத்தில் நீர்ப்பாசனம் மற்றும் மின்சக்தி துறையில் கட்டணப் பணியாளர்களாக பணிபுரிந்துவந்தவர்களின் இதேபோன்ற கோரிக்கைகளிலிருந்து எழுந்தது. பஞ்சாப் அரசுப்பணி விதிகளின் தொடர்புடைய வகையமானது, மாநில அரசின் கீழ்வரும் நிலையற்ற அல்லது தற்காலிகப் பணியை தங்குதடையின்றி அனுமதித்து, அதில் அல்லது மற்றொரு பதவியில் உறுதிசெய்யப்படுவதைத் தொடர்ந்து, தகுதிபெறு பணிக்காலத்தை முழுமையாகக் கணக்கிட்டு, கட்டணப் பணியாளர் தொகுதியிலுள்ள பணிக்காலத்தை நீக்கியது. மேற்சொன்ன விதியானது, பஞ்சாப் மற்றும் உறரியானா உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வினால் அகற்றப்பட்டது. ஆயினும், *(மேற்கண்ட)* **நகாரா சிங்** என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் தீர்முடிவானது,

பஞ்சாப் மாநில அரசு மின்வாரியத்தில் பணியாளராக இருப்பவரின் ஓய்வூதியப் பயன்களைக் கணக்கிடும்பொருட்டு, அவர் மத்திய அரசு அல்லது மாநில அரசில் கட்டணப் பணி ஊழியராகப் பணிபுரிந்த காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு அனுமதியளிக்கும் இரு சுற்றறிக்கைகளின் அடிப்படையாக கொண்டதாகும். இம்மேல்முறையீடுகளிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களும், கட்டணப்-பணி ஊழியர்கள் என்று தீர்மானிக்கமுடியாது. மேற்கூறிய பணிப்பிரிவு ஊழியர்களான கட்டணப்-பணி ஊழியர்கள், குறிப்பிட்ட பணிக்காக நியமிக்கப்படுகின்றனர், அத்தகைய பணிக்காக அவர்களின் ஊதியம் மற்றும் படிகள் வழங்கத்தக்கன. கி.அ.ப.-ஆன எதிர்மேல்முறையீட்டாளர்களின் பணிவரம்பு, பகுதிநேர தன்மையுடையதாகும். அவர்கள் மேற்கொண்ட பணியானது நிலையான கூறுடையதாக இருந்தபோதிலும், அவர்கள் மற்ற தொழில்களில் தம்மைதாமே ஈடுபடுத்திக்கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர். அவர்கள் அரசுப் பணியிடங்களாக உருவாக்கப்பட்ட கிராம அஞ்சல் பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர். கி.அ.ப.-ஆக பணியாற்றியவர்கள் என்ற பொருண்மை, கி.அ.ப.-கள் என்ற பணித்தகுதியில் அவர்கள் ஆற்றிய பணியை நீட்டிக்கும்விதமாக அவர்களின் பணி முழுநேர பணித்தன்மை கொண்டதென குறிப்பாக கருதமுடியாது. பிந்தைய பணியானது, வெவ்வேறு பணித்தன்மைகள் கொண்டுள்ள வெவ்வேறு பணி விதிகளால் நெறிப்படுத்தப்பட்டன. தெரிவு நடைமுறையை நிறைவேற்றுவதில் அதிகாரிகளின் தரப்பில் தாமதம் ஏற்படுவதால் ஒரு பணியாளரை முறையான பணியிடத்தில் முன்தேதியிட்டு தெரிவு செய்யவும் முடியாது. உரிமையியல் மேல்முறையீடு எண் *5008/2016*, சி.அ.ம. *(உ)* எண் *16767/2016*, உரிமையியல் மேல்முறையீடு எண் *8379/2016* மற்றும் உரிமையியல் மேல்முறையீடு எண் *10810/2016* ஆகிய மேல்முறையீடுகளின் விடயப் பொருளாக அமைந்துள்ள தீர்ப்புரைகளில்,

இக்கூறின்பேரிலான உயர் நீதிமன்றத்தின் கருத்துரையுடன் நாங்கள் உடன்படவில்லை. ஒரு குறிப்பிட்ட சட்ட வகையம் ஏதும் இல்லாதநிலையில் ஒரு குறிப்பிட்ட பணியிடத்திலுள்ள பணியாளரின் பணிக்காலமானது அம்முறையில் செயற்கைத்தனமாக நீட்டிக்கமுடியாது.

16. (மேற்கண்ட) **இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்** என்ற வழக்கில், கி.அ.ப.-கள் என்ற பணித்தகுதியில் பணிக்காலத்தை கணக்கிடுவதற்காக அவர்களால் எழுப்பப்பட்ட இதேபோன்ற கோரிக்கை திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்டது. இத்தொகுப்பு மேல்முறையீடுகளில் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு தேவையான தகுதிப்பெறு பணிக்காலத்திலுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு கி.அ.ப.-ஆக பணியாற்றிய பணிக்காலத்தை கணக்கிடும்படி கூறும் எந்தவொரு குறிப்பிட்ட விதியும் அல்லது நிர்வாக சுற்றறிக்கையுங்கூட ஏதுமில்லை. எதிர்மேல்முறையீட்டாளர்களால் வலியுறுத்திக் கூறப்பட்ட ஒரே சுற்றறிக்கையானது, 1991-ஆம் ஆண்டு சுற்றறிக்கையேயாகும், அது (மேற்கண்ட) **இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்** என்கிற வழக்கில் பரிசீலிக்கப்பட்டது. கி.அ.ப.-இன் பணி முழுநேர பணியாகாது என்பதால் மேற்படி சுற்றறிக்கையின் பலன்கள் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு பயனளிக்காது. ஆகவே, ஒரே நிலையிலுள்ள பணியாளர்கள்மீதான காண்முடிவு தெள்ளத்தெளிவாக உள்ளதால், எதிர்மேல்முறையீட்டாளர்களின் வாதத்திற்காதரவாக (மேற்கண்ட) **உறபீப் கான்** வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அகவுரையை பொருத்தமுடியும் என நாங்கள் எண்ணவில்லை. எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக **நீ.பே.ம. எண் 81699/2011-இல் இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- தட்டப்பா** என்கிற வழக்கில் 2011-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ஆம் நாளன்று, கர்நாடக உயர் நீதிமன்றத்தால்

வழங்கப்பட்டுள்ள அறிக்கையிடப்படாத தீர்ப்புரையும் மேற்கோள்காட்டப்பட்டுள்ளது. துறைசாரா முகவராக பணியாற்றிய பணிக்காலத்தை, ஓய்வூதியம் தொடர்பான தகுதிப்பெறு பணிக்காலத்திற்காக கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு இத்தீர்ப்புரை ஆதரவளிக்கிறது, மேலும், கர்நாடக உயர் நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு, பணியானது நடைமுறையில் தொடர்ச்சியான தன்மையுடையது எனவும், மேலும் அது ஒரு பணியிலிருந்து மற்றொன்றுக்கு செல்வதைப் போன்றதல்ல என்ற அடிப்படையில் வழக்கை நடத்தியது. ஆனால், இக்கருத்துரையானது, *(மேற்கண்ட)* **இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் ஏற்கப்படவில்லை.

17. விதிகள் *1972*-இன் கூறு *49(3)*-இன் கீழ் எதிர்மேல்முறையீட்டாளர்கள் முறையான பணியில் *9* ஆண்டுகள் மற்றும் *3* மாதங்களுக்கு மேலாக பணியாற்றியிருந்தால், அவர்களின் தகுதிப்பெறு பணிக்காலத்திற்கு கூடுதல் பணிக்காலத்தை கணக்கிடும்பொருட்டு பெறுவதற்குரியவர்கள் என்பதும் எதிர்மனுதாரர்களின் வழக்கு விவரமாகும். மேற்படி விதி *49(3)* குறிப்பிடுவதாவது:-

> *"*தகுதிப்பெறு பணிக்காலத்தின் அளவை கணக்கிடுகையில், ஓர் ஆண்டின் மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட மாதங்களை சமமாகப் பகுத்து, முழுமைபெற்ற ஓர் அரையாண்டாகக் கருதி, அதனை தகுதிப்பெறு பணிக்காலமாக கணக்கிடவேண்டும்.*"*

ஒரு பணியாளர் ஓராண்டு காலத்திற்குள், ஆறு மாதங்களுக்கு மேலாக பணியாற்றியிருந்தால், அப்பொழுது மொத்த பணிக்காலம் ஓர் அரை ஆண்டு காலத்தை இரு பகுதிகளாக இரண்டுமுறை கணக்கிட்டு, அந்த ஓராண்டை

பணிக்காலத்துடன் சேர்த்திருக்கவேண்டும் என்ற வாதுரைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், எங்களது கருத்தின்படி, மேற்படி விதியை தெளிவாக வாசித்ததில் அத்தகையதொரு பொருள்விளக்கம் அளிக்கப்படவில்லை என்பதாகும். ஓராண்டின் ஒரு பகுதியாக 3 மாதங்களுக்கும் மேலான பணிக்காலம் இருக்குமானால் அது ஒருமுறை பலனளிப்பதாக அவ்விதி கருத்துரைக்கிறது.

18. 1972-ஆம் ஆண்டு விதிகளின் விதி 88-ஆனது, ஒரு குறிப்பிட்ட வழக்கில் மட்டுமிஞ்சிய இன்னலை தடுப்பதற்கு, எந்தவொரு விதியின் செயல்பாட்டையும் தளர்த்துவதற்கு தொடர்புடைய அமைச்சகத்திற்கோ அல்லது துறைக்கோ அதிகாரமளிக்கிறது. விதி 88-இல் அடங்கியுள்ள இவ்வகைமுறையானது வகை செய்வதாவது:-

> "88. தளர்த்தும் அதிகாரம்.
>
> அமைச்சகமோ அல்லது அரசுத் துறையோ எதுவும், இவ்விதிகளின் செயல்பாடானது, ஒரு குறிப்பிட்ட வழக்கு எதிலும் மட்டுமிஞ்சிய இன்னல் விளைவதாக உணருமிடத்து, அந்த அமைச்சகமோ அல்லது துறையோ, நேர்வுக்கேற்ப ஒரு வழக்கை நேர்மையான மற்றும் நியாயமான முறையில் கையாள்வதற்கு அவசியமானதென கருதலாகும், அத்தகைய விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, எழுத்துமூலம் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுடன் உத்தரவின்மூலம் அவ்விதியின் தேவைப்பாடுகளை நீக்கவோ அல்லது தளர்த்தவோ செய்யலாம்:

வரம்புரையாக, அவ்வாறான எந்த உத்தரவும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறையின் இசைவின்றி பிறப்பிக்கக்கூடாது."

ஆயினும், மேற்படி விதிகளின் கீழ் அதிகாரத்தைச் செலுத்துதல் என்பது நிர்வாகத் துறையின் தீர்வெல்லைக்குட்பட்டதாகும். சற்று குறைவாக உள்ள தகுதிப்பெறு பணிக்காலத்திற்கு ஒவ்வொரு வழக்கிலும் அவ்வாறு விதியை தளர்த்தும் அதிகாரம் செயல்படுத்தப்பட்டால், அது முடிவற்ற செயல்பாடாக அமைந்துவிடும் என்பதே எதிர்மேல்முறையீட்டாளரின் வாதமாகும்.

19. எங்களது கருத்தின்படி, தகுதிப்பெறு பணிக்கால தேவைப்பாடு தொடர்பாக மேற்படி விதிகளின் வகைமுறைகளைக் கருத்திற்கொண்டு, கிராம அஞ்சல் பணியாளர்களாக அல்லது மற்ற துறைசாரா முகவர்களாக எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஆற்றிய பணிக்காலத்தை, ஓய்வூதியம் வழங்கும் பிரச்சினைகளின்பேரில் அஞ்சல்துறையின் கீழ் முறையான பணியிடங்களில் அவர்களது தகுதிப்பெறு பணிக்காலத்தை கணக்கிடுவதற்காக கணக்கில் எடுத்துக்கொள்ளமுடியாது என்பதாகும். ஆனால், எதிர்மேல்முறையீட்டாளர்களில் பலர் தங்களது முறையான பணிக்காலத்தில் சற்று குறைந்திருக்கும் நிலை காரணமாக ஓய்வூதியத்தை இழந்துவிடுவதாகவும் நாங்கள் அறிகிறோம். இது ஓய்வூதியம் வழங்குவதற்கு கனிவுடன் பரிசீலிக்கப்படுவதற்குரியதாகும். ஆனால், அவர்கள் கி.அ.ப. அல்லது அதன் வெவ்வேறான பணிநிலையில் பணியாற்றிவந்த காலத்தை, குறைவாகவுள்ள அவர்களது பணிக்காலத்துடன் சேர்த்து நிரப்பிட எங்களை அனுமதிக்கக்கூடிய எந்தவொரு சட்டக் கோட்பாட்டின் அதிகாரத்தையோ அல்லது அதிகாரவரம்பையோ நாங்கள் தேடி கண்டுபிடிக்க இயலாது. அதேவேளையில், (மேற்கண்ட) **இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்** என்ற வழக்கில், பணியிலிருப்பவர்

*(2-*ஆம் எதிர்மேல்முறையீட்டாளரானவர்*)* ஒன்பது ஆண்டுகள், இரண்டு மாதங்களுக்கான பணிக்காலத்தை நிறைவுசெய்திருந்தபோதிலும், இந்திய அரசு அவருக்கு முறையான ஓய்வூதியத்தை வழங்கிடும்படி உத்தரவு பிறப்பித்தது. இந்திய அரசின் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டபோதிலும், இந்நீதிமன்றமானது, *2015-*ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் *24-*ஆம் தேதியன்று பிறப்பித்த உத்தரவில், அவரது ஓய்வூதியத்திற்கு பாதுகாப்பளித்திருந்தது.

20. ஏற்கெனவே விவாதித்த இக்காரணங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டிலுள்ள தீர்ப்புரைகளை நிலைநிறுத்தமுடியாது என நாங்கள் கருதுகிறோம். எதிர்மேல்முறையீட்டாளர்கள், கி.அ.ப. என்ற பணித் தகுதியில் அவர்கள் ஆற்றிய எந்தப் பணிக்காலத்தினையும், ஓய்வூதியம் வழங்குவதற்கான பிரச்சினையில் தகுதிப்பெறு பணிக்காலத்தைப் பூர்த்திசெய்யும்பொருட்டு, அதனடிப்படையில், அஞ்சல் துறையில் அவர்களின் முறையான பணிக்காலத்துடன் அது சேர்க்கப்படவேண்டும் என்பதற்கு சட்டத்தின் கீழ் யாதொரு வகைமுறையுமில்லை.

21. அதிகாரமைப்புகள், விதி *88-*இல் அடங்கியுள்ள நிபந்தனைகள், இவ்வழக்குகள் ஏதொன்றிலும் நிறைவுசெய்யப்பட்டுள்ளன என அறியுமெனில், அவை *1972-*ஆம் ஆண்டு விதிகளின் கீழ் தகுதிபெறு பணிக்காலத்தை வலியுறுத்தும் தேவையைத் தளர்த்தும் அதிகாரத்தைச் செலுத்துவதற்கான அவர்களின் வழக்குகளைப் பரிசீலித்திருக்கவேண்டும் என நாங்கள் கருதுகிறோம். இச்செயல்பாடு நீண்டுகொண்டே இருப்பதால், விதி *88-*இன் துணையை நாடியிருக்கவில்லை என்ற மேல்முறையீட்டாளர்களின் நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கவில்லை. மேற்படி விதிகள் தெளிவான கூறாக இல்லை, மேலும், பெருமளவிலான பணியாளர்களுக்கு மட்டுமிஞ்சிய இன்னல் விளைவிக்கப்படுமானால், அவர்களின் வழக்குகள் அனைத்தும்

பரிசீலிக்கப்படவேண்டும். (மேற்கண்ட) **இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்** என்ற வழக்கில் உத்தரவிடப்பட்டுள்ளதைப்போன்று, எதிர்மேல்முறையீட்டாளர்களில் எவரேனும் ஒருவரின் ஓய்வூதியம் தொடர்பான வழக்குகளில் ஏற்கெனவே ஆணை வழங்கப்பட்டிருக்குமாயின், அதில் இடையூறு செய்யக்கூடாது. நாங்கள் அதன்படியே இந்த மேல்முறையீடுகளை அனுமதித்து, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேல்முறையீட்டின் கீழான தீர்ப்புரைகளை நீக்கறவு செய்கிறோம்:-

(i) மத்திய அரசோ அல்லது அஞ்சல் துறையோ, எதிர்மேல்முறையீட்டாளர்களில் எவரேனும் ஒருவருக்கு ஓய்வூதியத்திற்கான ஆணையை ஏற்கெனவே வழங்கியிருக்கும்நேர்வில், அவ்வோய்வூதியத்திற்கு இடையூறு செய்யக்கூடாது. இவ்வாறான உத்தரவைப் பிறப்பிக்கையில், (மேற்கண்ட) **இந்திய அரசு மற்றும் பலர் -எதிர்- பதிவாளர் மற்றும் ஒருவர்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படவேண்டியதாக உத்தரவிடப்பட்டமுறையை நாங்கள் பின்பற்றுகிறோம்.

(ii) ஓய்வூதியத்திற்கான ஆணை ஏதும் வழங்கப்பட்டிருக்காத மற்ற எதிர்மேல்முறையீட்டாளர்களை பொறுத்தவரையில், அவர்களது வழக்குகளில், 1972-ஆம் ஆண்டு விதிகளின் விதி 88-இன்படி குறைந்தபட்ச தகுதிப்பெறு பணிக்காலம் தளர்த்தப்படலாமா? என்பதை தொடர்புடைய அமைச்சகம் பரிசீலிக்கலாம்.

22. இம்மேல்முறையீடுகளில், இடைக்கால உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்பட்டிருப்பின், அவை தள்ளுபடி செய்யப்படுகின்றன. தொடர்புடைய விண்ணப்பங்கள் அனைத்தும் தீர்வு செய்யப்படுகின்றன.

23. செலவுத்தொகை குறித்த உத்தரவு ஏதுமில்லை.

மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசர் திரு. ரஞ்சன் கோகாய்

மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா

மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருதா போஸ்

புது தில்லி,

8.11.2019.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."